[1978 எப்ரல் 1

கும்பகோணம் கூட்டுறவு வங்கி

*755வினு திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1976-77 ஆண்டு Reserve Banks–ல் இருந்து நம் மாநில கூட்டுறவு வங்கிக்குக் கொடுத்த விவசாயக் கடன் எவ்வளவு?

(ஆ) இதில் கும்பகோணம் கூட்டுறவு வங்கிக்கு நம் மாநில வங்கி கொடுத்த விவசாயக் கடன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) 1976-77 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கியிலிருந்து மத்திய கூட்டுறவு வங்கிகளின் சார்பாக தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு ஒட்டு மொத்தமாக கடன் ரூ. 7575 லட்சங்கள் தரப் பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ. 1000 லட்சங்கள் கடனுகத் தந்துள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே மத்திய வங்கியிலே ஆண்டுக் கடன் வழங்கும்போது எவ்வளவு தொகை வழங்கவேண்டுமென்று குறியீடு நிர்ணயிப்பதால் பலவித தவறுகள் நடைபெறுகின்றன, எப்படியாவது குறியீட்டுத் தொகையை வழங்கி விடவேண்டுமென்ற முறையில் பலவிதமான தவருன கடன்கள் வழங்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது, இது போன்ற தவறு நடைபெருமல் இருக்க குறியீடு நிர்ணயிக்காமல் அரசு கடன் வழங்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பொதுவாகக் கடன்கள் வழங்கும்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, எந்தவிதமான குறியீடும் நிர்ணயிக்கப்படுவதில்லை, அதற்கான அவசியமும் இல்லை. காரணம், பொதுவாக எல்லா மாவட்டங்களிலேயும் தேவைக்கும் அதிகமான அளவிற்கு அதிகமான விவசாயிகள் கடன்களைப் பெறுவதற்கு விண்ணப்பங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, ரிசர்வ் வங்கி அரசுக்குப் பணம் கொடுக்கும்பொழுது எத்தனை சதவிகித வட்டிக்குக் கொடுக்கிருர்கள்? அரசு கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கும்பொழுது எத்தனை சதவிகித வட்டிக்குக்கொடுக்கிருர்கள் இதனுல் மொத்தத்தில் அரசுக்கு இலாபம் ஏற்படுகிறதா அல்லது நஷ்டம் ஏற்படுகிறதா? எல்லாக் கடன்களுக்கும் ஒரே விதமான வட்டிவீதம் இருக்கிறதா அல்லது ஒவ்வொரு கடனுக்கும் எத்தனை சதவீதம் என்று நிர்ணயிக்கப்படுகிறதா?

1978 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு, க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, வட்டி விகிதத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு காரியங்களுக்காகக் கொடுக்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதங்களில் வித்தியாசம் இருக்கிறது. ஷார்ட் டெர்ம் லோன்களுக்குக் கொடுக்கப்படும் வட்டிக்கும், பிறகு அது கன்வர்ஷன் செய்யப்பட்டு மீடியம் டெர்ம் லோனுகும்பொழுது விதிக்கப்படும் வட்டிக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதைப்போல நிலவள வங்கிகள் மூலம் கொடுக்கப்படும் லாங் டெர்ம் லோன் அதாவது நீண்ட காலக் கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டிக்கும் வித்தியாசம் இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து ; தலைவரவர்களே, சமீபத்தில் ரிசர்வ் வங்கியினர் வட்டி விகிதத்தைக் குறைத்து வெளியிட்டிருக்கிறார்கள். அது இனிமேல் கொடுக்கப்படும் கடன்களுக்கு மட்டும் தானா? அல்லது பழைய கடன்களுக்கும் அது அமலாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ; பேரவைத் தலைவரவர்களே, அதற்கான புள்ளிவிவரத்தை நான் சேகரிக்கவில்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ரிசர்வ் வங்கியிலிருந்து நாம் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன்பெற்றால், புயல், அதனால் தள்ளுபடி செய்யுங்கள் என்றாலும் மாட்டோம், வெள்ளம், அதனால் தள்ளுபடி செய்யுங்கள் என்றாலும் மாட்டோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். இருபதாண்டு காலக்கடன் கொடுக்க வேண்டுமென்றாலும் முடியாது என்று ரிசர்வ் வங்கியினர் சொல்கிறார்கள். எனவே, நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தில் இதைப்பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து ரிசர்வ் வங்கியின் போக்கைத் தட்டிக் கேட்கின்ற வகையில் நம்முடைய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்றத்தில் அரசின் சார்பில் கொண்டு வர வேண்டிய நியதி இல்லை, தனியாரும் தீர்மானங்களைக் கொண்டு வரலாம்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது நிலவள வங்கிகளின் மூலம் வழங்கப்படும் கடன்கள், என்னென்ன காரியங்களுக்கு, எந்தெந்த ஆண்டு, எவ்வளவு தொகை வழங்க வேண்டுமென்ற நியதிப்படி வழங்கப்படுகின்றது. இந்த முறையினால் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான கடனை வாங்க முடியவில்லை என்பதால் எந்தக் காரியத்திற்கும், எந்த நேரத்திலும், எந்த நிலவள வங்கியிலும் கடன் வாங்கும் வகையில் விவசாயிகளுக்கு வசதி செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனையைப் பரிசீலிக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கங்களில் இன்றையதினம் சிறு விவசாயிகளுக்குக் கடன் தரப்படுகிறது. அதிலே இப்பொழுது மாடு அல்லது வண்டி வாங்குவதற்குக்கூட கடன் தருகிருர்கள். 10 அல்லது 11 கிராமங்கள் அடங்கியுள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் 10 பேர் 5 பேர்களுக்குத்தான் தருகிருர்கள். அதனுல் ஏகப்பட்ட தகராறுகள் வருகின்றன. எனவே, இப்படிப்பட்ட கடன் தொகைகளை அதிகப்படுத்தி விவசாயிகளுக்கு உதவ அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, எந்தப் புதிய முறைகளை வகுத்து அவற்றைக் கடைப்பிடிப்பதாக இருந்தாலும் விவசாயிகளுக்கு அது உண்மையிலேயே நன்மை தரத்தக்க திட்டங்களாக இருக்குமேயானுல் இந்த அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, சமீபத்தில் பீகார் மாநில அரசு விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்களினுல் கொடுக்கப்பட்ட கடன்களுக்கான வட்டியை ரத்து செய்திருக்கிறது. தமிழ்நாட்டிலும் வெள்ளம், வறட்சியாலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய கடன் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த அரசு அந்தக் கடன்களுக்கான வட்டியை ரத்து செய்வதற்கு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அசலையோ அல்லது வட்டியையோ ரத்து செய்வதற்குண்டான அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள்.

புதிய பல்கலைக் கழகங்கள்

*756 வினு—திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கஜேந்திர கட்கர் குழுவின் பரிந்துரையான 30 முதல் 40 கல்லூரிகளை மட்டும் கொண்ட பல்கலைக்கழகங்கள் இயங்க வேண்டுமென்ற ஆலோசனையை அரசு ஏற்றுக்கொண்டதா?

(ஆ) ஆம் எனில் தமிழகத்தில் இன்னும் எத்தனை பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கபடும்!